# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## In the Court of the Judicial Magistrate No.I. Mayiladuthurai
## C.C.NO.215/2024

Deposition of Lw8 Examined as Pw8 Dt. 21.07.2026

| | |
|---|---|
| Name | பன்னீர்செல்வம் |
| Father Name | சேதுராமன் |
| Calling | சிறப்பு உதவி ஆய்வாளர் குத்தாலம் |
| Age | 58/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day21.07.26.

**Accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது குத்தாலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்த போது கடந்த 17.01.2024 ஆம் தேதி 21.00 மணிக்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று உடனடியாக மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த தியாகராஜன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றேன். அதன் பிறகு நிலையம் வந்து 18.01.2024 ஆம் தேதி மனு ரசீது 73/2024 பதிவு செய்தேன். அதன் பிறகு 20.01.2024 ஆம் தேதி காவல் நிலைய குற்ற எண் 20/2024 இதச பிரிவுகள் 294(b),324,506(2) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா. ஆ. –4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

பிறகு மேல் நடவடிக்கைகாக உதவி ஆய்வளார் வசம் ஒப்படைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் என்ன என்றால் இரவு 21.00 மணி. எனக்கு மருத்துவமனையிலிருந்து எத்தனை மணிக்கு தகவல் வந்தது என்றால் இரவு 20.00 மணிக்கு தகவல் வந்தது. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் 20.00 மணிக்கு தகவல் கிடைத்தது என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. புகார் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்ட நேரம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

முதல் தகவல் அறிக்கையில் உள்ள சங்கதிகள் படி அது உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக்கூடிய குற்றங்கள் என்றால் சரிதான். எந்த காரணத்திற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் மனு ரசிது போட்டேன் என்றால் எதிரிகளை தேடிச் சென்று அவர்கள் கிடைக்கவில்லை. பொங்கல் நேரம் என்பதால் மனு ரசிது போட்டேன். 3 நாட்கள் கழித்துதான் முதல் தகவல் அ றிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். மேற்படி 3 நாட்களில் இந்த மனு ரசிது சம்பந்தமாக விசாரணை ஏதும் மேற்கொண்டேனா என்றால் எதிரிகளை தேடிச் சென்றேன் வேறு யாரையும் விசாரணை செய்தேனா என்றால் இல்லை.

S.[signature] 55+442

நான் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் விசாரணைக்குப் பின் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் மனு இரசிது கொடுத்த பிறகு எந்த வித விசாரணையும் மேற்கொள்ளாமல் இந்த எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
C.C.NO.215/2024

Deposition of Lw9 Examined as Pw9 Dt. 21.07.2026

| | |
|---|---|
| Name | கலியபெருமாள் |
| Father Name | கணபதி |
| Calling | உதவி ஆய்வாளர் சீர்காழி |
| Age | 59/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day21.07.26.

**Accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சீர்காழி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் குத்தாலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 20.01.2024 ஆம் தேதி மேற்படி வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 14.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் துரைராஜ், சரண்ராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகசர் மற்றும் வரைபடம் அ.த.சா.ஆ 5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

சாட்சிகள் பாபுராஜ், ராஜா, சிலம்பரசன், தியாகராஜன் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி எதிரிகளை தேடி அசிக்காடு பஸ் ஸ்டாப் அருகே எதிரி சூர்யா, என்பரை 16.30 மணிக்கு கைது செய்தும், உறவினர்களுக்கு தகவல் கொடுத்தும் 17.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணையம் பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை.

காயம்பட்ட தியாகராஜனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தமிழ்குமரன் என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்றேன். மருத்துவரின் காயச்சான்று படி காயம் கொடுங்காயம் என்பதால் சட்டப்பிரிவுகளை 294(b),324,506(2) லிருந்து 294(b),326,506(2) சட்டப்பிரிவுகளாக மாற்றி சட்ட மாற்ற அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி விசாரணையை முடித்து மேற்படி எதிரிகள் மீது 294(b),326,506(2) ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அச்சடிப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் தலைமைக் காவலர் தான் பெற்ற புகார் வாக்குமூலத்திற்கு மனு எண் கொடுத்துவிட்டு விசாரணைக்குப் பின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தலைமைக் காவலரை விசாரணை செய்த போது மனு எண் கொடுத்துவிட்டு யார் யாரை விசாரணை செய்தீர்கள் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையானவர்களை எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து விசாரணை செய்தேன் என்றால் அ.சா. 1 யை மட்டும் மருத்துவமனையிலும், மற்றவர்களை சம்பவ இடத்திலும் வைத்து 20.01.2024 ஆம் தேதி விசாரணை செய்தேன்.

மருத்துவர் கொடுத்த விபத்து பதிவேட்டை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அடையாளம் தெரிந்த 3 நபர்களும், அடையாளம் தெரியாத 17 நபர்களும் கட்டையாலும், கத்தியாலும் தாக்கியதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவ விசாரணையில் இதுபற்றி கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. காயம் பட்ட எதன் மூலமாக மருத்துவமனைக்கு வந்தார் என்பதை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

முக்கிய சான்று பொருளான ஆயுதங்களையோ, ரத்தகரை படிந்த ஆடையையோ கைப்பற்றினேனா என்றால் இல்லை. பார்வை மகசரில் துரைராஜ் என்பவர் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். நீங்கள் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சம்பவம் இடத்தில் வைத்து பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதில் கையொப்பம் செய்தவர்கள் எல்லாம் பட்டியல் சாட்சியில் உள்ள நபர்கள் இல்லை என்றால் சரியல்ல.

எதிரி ரத்தீஸ் என்பவர் அ.சா. 1 யை இரும்பு பைப்பில் அடித்தாக அ.சா. 1 போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இரும்பு கம்பியால் அடித்தாக சொன்னார். ரத்தீஸ் தான் அடித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. சாட்சி ராஜா என்னுடைய விசாரணையில் எதிரிகள் 4 பேரும் கட்டை மற்றும் இரும்பு வாள் கொண்டு அ.சா. 1 தாக்கியதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. பொங்கல் விழா முடித்துவிட்டு அசிக்காடு மெயின் ரோட்டில் வந்ததாகவும் அந்த இடத்தில் எதிரிகள் 4 பேரும் உட்கார்ந்திருந்ததாக எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. தடுக்க சென்றபோது ஊர்க்காரர்கள் அவரை இழுத்து சென்றுவிட்டதாகவும் எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

இந்த வழக்கில் சாட்சிகளை புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து எதிரி சூர்யாவை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

21/7/26

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை.